[Registered No. M. 329.

VOL. I. OCTOBER 1902. No. 6.

THE

Suguna Sundaram.

A MONTHLY TAMIL JOURNAL

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி."—குறள்.

CONTENTS.	PAGE.	அட்டவணை.	பக்கம்.
1. A speech to the heart	122	1. நெஞ்சொடுகூறல்	122
2. Charity	123	2. தருமம்	123
3. Roofs	127	3. கூரைகள்	127
4. Anavadhya	129	4. அநவத்யா	129
5. Court amins and Proces servers	132	5. கோர்ட்டு அமீனாக்களும் படிச்சேவகன்களும்	132
6. Invaluable hints for document writers	134	6 தஸ்தாவேஜ் எழுதுகிறவர் கட்[illegible] வேண்டிய குறிப்புகள்	134
7. General news	139	7 சமாசாரக்குறிப்புகள்	139
8. Good and bad	142	8. நன்மையுந்தீமையும்	142

Published by

T. S. SUBBARAMA AIYER, Inamdhar.

TURAIYUR.

Yearly Subscription Rs. 3—0—0. | Half Yearly Subscription. Rs. 1—12—0.

All Rights Reserved.

PRINETD AT THE DODSON PRESS, TRICHINOPOLY.

NOTICE.

Although there are several jou[illegible] world-wide, yet we request the learned public to lend a helping ha[illegible] ards the advancement of this journal also.

அறி[illegible]பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார[illegible]ளை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞ[illegible]த்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷை[illegible]லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இ[illegible]தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்கு கடமைப்பட்டிருத்தலால், அ[illegible]கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி [illegible]ளென நம்புகிறோம்.

1 திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
பரவாவடுதுறை வாழ்புண்பார்—குருமரபுக்
கோர்தீபமாகி யொளிறம்பலவாணப்
பேரானடி யெமக்குப்பேறு.

2 ஆதலினீ யன்னோனடிக்கமலஞ் சென்றிறைஞ்சப்
போதுதியேலஞ்சுகுணசுந்தரதா—வாதவருங்
குன்றன்னோ ரெதரக்கொண்டிக்கு வலயத்திற்
சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1 வேற்கரசே யென்ன விபுதர்தமைக்காத்தருளும்
பாற்கர சேதுபதித்துரையைப்—போற்றுதியேல்
இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
வன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2 எதுபதிச்செல்வா மென்றெண்ணியிடருழக்கு
மாதுலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சீத
மதிக்குடைக்கீழ் தங்கமதுர மொழிச்சேது
பதிப்பாற் கரதுரைகண்பார்.

ஆற்றுப்படை

4 அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
பெறு சுகுணசுந்தர நீபெட்பி—னுறுதற்
குரைத்தேவர் பாலெனுலகு புகழ்பாண்டித்
துரைத்தேவர் பாலடைந்து சொல்.

ADVERTS: Favourable Rates.—Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 60. English adverts at as. 6 per line. For othor details apply to the Managing Proprietor "Sugunasundaram" Office, Turaiyur Musiri Taluq.

ஸ

சுகுணசுந்த்ரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வாலம் 1. 1902௵ அக்டோபர்௴. நெ. 6.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage		Rs. 3—0—0
Half yearly ,,	,,	,, 1-12—0
Single copy ,,	,,	,, 0—5—0
Back numbers	,,	,, 0—6—0

Foreign Subscription 6. S. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid.

A copy will be sent free to those who contribute articles to the Journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

☞ The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

சந்தாவிவரம்.

௵1க்கு தபால்கூலிஉள்பட			ரூ. 3—0—0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12—0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0—5—0
பழய பிரதி	,,	,,	0—6—0

இப்பத்திரிகைக்கு மே௴ முதல் சந்தாக்கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத்துகையை முன் பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச்சந்தாவில் அணா 8ம், ஆறுமாதச்சந்தாவில் அணா 4ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒரு மாதத்தவணையுங் கொடுக்கப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனாமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்த பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்தயோக்யதை யுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக்கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந்தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதியனுப்பினோர் அனுமதியை எதிர்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவறிப்போகும்நிம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்கு கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்படமாட்டா.

நெஞ்சொடுகூறல்.

1 உலகு தொழக்குண வரையினெழுச்சிசெ யுதயனெனச்சுட ருமிழு
முடிப்புனை
கலனு மணிப்புய வரையின் விசித்திடு கழுவுமணிப்பொலி வலைய
முரத்திடை
யிலகு சரப்பணி யெழில் கொள் பதக்கமு மிமிழ்செய் கடற்படு தரள
வடத்தொடு
நிலவுசெயக்குழை யிவுளி தொடுத்துய ரிரத நடத்துறு நிருபனடற்
புலி,

2 தவளமதிக்குடை குளிர் நிழலைச்செய சவரியிரட்டுநர் புடை மருவச்
சிறு
சவளமடற்படை வயவரெடுத்தயன் மருவுசமற்கொரு நிகரவுருத்துற
பவள விதழ்த்திரு மகளிர் விழிக்கணை பதிய விடுத்தனர் தொடர மரு
ப்பிணைக்
கவளமுரட்கரி பிடரி மிசைப்பொலி பவனி நடத்துறு கவிஞருயிர்த்
துணை,

3 பவனனதிர்ப்புறு கடலில் விசைத்தலை பரவ வெழுப்புறு பரிசின்
முருக்கிய
தவனமெடுத்தலை பகைவர் முடித்தலை தகரவடித்திடு வலிய குளப்படி
புவனமனைத்தையு மரை நிமிடத்தினில் புகுபுவரத்தகு திறமை மிகு
த்துயர்
கவன வயப்பரி யினிதினடத்துறு விடலையெனப்படு கலைவலருக்குயி

4 முறை சொல வந்தவர் கவி சொலி வந்தவர் முது மறை யந்தண ரிர
வலரும்புக
விறை தர வந்தவ ரணிமணியொண்டுகி லெழில் செய்துரங்கமோ
டிழிமதகுஞ்சரங்
கறவை பெரும்பிய லிடபம் வளம்பயில் கவரி விலங்குகள் பறவையி
னம்பகர்
துறையின் வழங்குநர் நிறையு நெடுங்கடை யுடைய துரந்தர துரை
யெமருந்துணை,

5 ஆலவனத்தொடு மாடகநற்சபை யாதியிடத்தினி லாடலெடுத்தவ
னீலவனப்பமை யாலமிடற்றின னேய மிகுத்திடு பூசை நிரப்புபு
சீலவுருத்திர மாமணி நற்றிரு நீறு தரித்தொளி சேரு முறுப்பொடு
மூலமனுப்பயி ·ஞவுமுடைச்சிறை மூசுமளிப்பயிரூர்புனை கற்பகம்,

:

வேறு

6 விதுவைத்தொடு முடிபெற்றுயர் மிளிர் பொற்பணி மணியுற்றொளிர்
புதுவைப்பெரு நகரைப் புகழ் புணரிக்கொரு நிகரைப்பெற
மதுவைச்சொரி மலரிற்பொலி வளனுற்றிடு முகவைப்பதி
யிதனைப்பெரி துளம் வைத்தினி துறையக்கொளு மிறை சற்குணன்,

வேறு

7 கத்தமா கடலுதித்த வாண்மதி கவை இயமீன்கண மென்னலாய்
முத்தமாமணி வயாவி னெந்துவளை வீசிமொய்த்து விரி பழனமும்
சுத்தமாயபுன னீடுபொய்கைபல சூழமேவு மெழில் பாலவ
னத்தமாநகர மினிதிஞேங்கியுற நணி புரந்துவரு நாயகன்.

8 உக்கிரப் பெருவழுதி நாம மூலகோது பான்மையினை யுடைமையாற்
றசகதாகி விரி புகழி னீடுதமிழ்ச் சங்கமா மதுரை நிறுவிஞே
னெக்கலைக்குழுவு மினிது ளுய்ந்துளனி, யானெனும்புலமை காட்டவே
தொக்கதாய பன் னூற்றிரட்டுனா றுரிசறப்புவியி னல்கிஞேன்,

வேறு

9 அறக்கடவுட் குறையுளென வாடகப்பொன்மணி குயின்று
துறக்கநகர்ப் புகுநதுலவு துகிற்கொடிகடுவன் றிமிகு
சிறப்புறுநன் மணிமாடந் தெருக்களினுற் பொலிந்துவள
முறத்திகழும் புதுவையினு முகவையினு முடையபிரான்.

10 தும்பிநா டரியமலர்த் துருமங்க ளுறக்கமுறீஇக்
கொம்பினு டைந்தருவின் குலத்திநெடு முறவுகொள
வம்பினுடலர் பொதுளும் வயலினறல் வளமிருந்த
செம்பிநா டணிவையைச் செழுநதியுமுடையபிரான்,

11 இன்னசிறப்பினனுக வெய்துறுபாண்டித்துரையா
மன்னவனையெய்தியவன் மங்களத்தை நிகர்த்தவெழிற்
கன்னவிற்றேட் புளைதளவக் கவின்மாலை பெற்றீண்டென்
முன்னனுகிக் காப்பதற்கு முபலுதியா னன்னெஞ்சே.

டி. பி. விசுவநாதபிள்ளை.

தருமம்.

தருமத்தைப்பற்றி யோசிக்குமிடத்து செய்வப்புலமை திரு[illegible]வளுவனார்,

"வறியார்க் கொன்றீவதே யீகைமற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து."

என்றருளிச்செய்திருக்கின்றனர்; அதாவது, தரித்திரருக்குக்கொடுத்தலே
கொடையாகும், மற்றவர்கட்குக்கொடுத்தல் பின் வாங்கிக்கொள்ளும் பயனு
கும், எவ்வாறெனில், தரித்திரர் இன்மையால் மெலிந்துவந்தடைந்து யாசித்
தலின் அவர்கட்கீதல் பிரதிபலனை உத்தேசியாது ஈவதாகின்றது. ஏனையர்
க்கீவது பின்னெந்த மூலியமாயாகிலும் வாங்கிக்கொள்வதாகும். பிரதிபலனை
உத்தேசியாது ஈவதினு லென்ன பலனிருக்கின்றது என்று வினவப்புகின்,
உதாரணமாக:—நிடதபுரிக்கோனுகிய நளச்சக்கிரவர்த்தியைப்பற்றி யாருங்
கேழ்விப்பட்டிருக்கலாம். அவர் வஸந்தகாலத்தில் சிங்காரவனத்திலிருக்குங்
கால், ஓரன்னப்பறவையைப் பிடித்துத்தரத்தன் வேலைக்காரரை ஏவ, அவ
ரப்படியே செய்ய, அதனழகை நோக்கி யானந்தமடையுங்கால், அந்த அழ
கு வாய்ந்த அன்னம் மிகவும் சோகத்தையடைந்து, அரசனுக்குத்தன் குறை
களைச்சொல்லி இரங்க, அதற்கவ்வரசன் அந்த அன்னத்தை ஸ்வயேச்சை
யுடன் போகவிடவும், அப்பறவை மிகவும் சந்துஷ்டியடைந்து அரசன் செ
ய்த நன்மைக்கு கைம்மாருக உலகத்திலிருக்கும வநிதைகளிலழகுவாய்ந்த
மங்கையாகிய தமயந்தியை மணம்புரிவித்தது. அரசன் அந்தப்பறவை
யைக் கொல்லாமலும், பிரதிபிரயோசனத்தை கருதாமலும் அதற்குஸ்வ
யேச்சையைக்கொடுத்த தருமமே இவ்வளவுமகிமையை யுண்டுபண்ணிற்றெ
ன்ருல் மற்றஐயறிவு விசேஷங்களோடு கூடியமானிடர் வருந்துங்கால், அவர்
கட்குச்செய்யும் தருமத்தினுல் விளையும் பேறு அதிகமென்றுரைக்க ஐய
மேயில்லை. சிபிச்சக்கரவர்த்தி ஓர் புருவின் நிமித்தம் தனது தேகத்தை
அரிந்துகொடுத்து அதனுல் பெரும்பேறடைந்திருக்கிருர். இன்னமிதே மா
திரியான அளவிறந்த புராணகதைகளிருக்கின்றன. இவைகள் மெய்யாயி
ருக்குமா, நாம் தருமஞ்செய்ய வேண்டியதவசியந்தானு, வென்ருலோசித்துப்
பார்ப்போம்.

நாமேதாகிலுமோர் ஊருக்குப்போகும்படி நேரிட்டு வழியில் மரம்
மட்டைகளுமில்லாமற்றண்ணீர் கிடைப்பது மரிதாக விருக்குமிடத்து, நம
க்கு நாவுலர்ந்து, தேகமிளைத்து மிகவுமவஸ்தைப்படுங்காலத்தில், யாராகி
லுமொருவர் நமது தாகவிடாய் தீர்க்கும்பக்ஷத்தில், நமக்குண்டாகுமின்பமி
வ்வளவவ்வளவென்று சொல்லமுடியாதல்லவா? அப்படிக்குடிக்கத்தண்ணீ
ர் கிடையாதவரை, நாமிறந்துபோகவு நேரிடுமல்லவா? தினம் தினம் நாம்ஸ்
நானம் பண்ணவும், பருகவும், இன்னமற்றெல்லா காரியங்களுக்குந்தேவையா
இன்றியமையாததாயுமிருக்கிற தண்ணீர் அது கிடைக்கக்கூடாதவி
கிடைப்பதே யிவ்வளவு சந்தோஷத்தைக்கொடுக்கக்கூடுமானுல்,
ளைப்பற்றிப் பேசுவானேன்; இவைகளையுத்தேசித்துத்தான் பெரி
ண்ணீர்ப்பந்தலென்றும், அன்னசத்திரமென்றும், மடங்களேற்

படித்தியும் நடத்தியும் வருகிறார்கள். ஒவ்வொருவர் தாமத்தின் பொருட்டுத் தங்களுடைய செல்வமனைத்தையும் செலவழிக்கிறார்கள். அப்படியிருக்க, ஜனங்கள் தருமஞ்செய்பவர்களை முட்டாளென்றும் சுவர்க்கமுங்கைலாயமுஞ்சமீபிவித்துவிட்டதென்றும் எண்ணிக்கொண்டுவீணேசெலவழிக்கிறான் என்றேசுகிறார்கள்; சிலர் பிச்சைக்கு வந்தவர்களைவைதும், தடிகொண்டுமோட்டியும துரத்திவிடுகிறார்கள்; சிலர் பிச்சைக்காரரைக கண்டால் வேலைசெய்து பிழைக்கக்கூடாதா? தடிப்பயல் ஏன் பிச்சைக்கு வரவேண்டுமென்றும், சொல்லித் துரத்திவிடுகிறார்கள்; சிலர் அங்கஹீனமுள்ளவர்களைக் கண்டால் அவர்களைப்பார்த்து, உனக்குச்சாவு வரவில்லையா, இப்படியாவது பிச்சை புகுந்து சாப்பிடுவானேன், பாமுஞ்சன்மம், எதிரில் நில்லாதே போவென்றும, பிராமணனுடைய சொதது உனக்காகாது போவென்றுஞ்சொல்லித் துரத்திவிடுகிறார்கள். ஐயோபாவம்! ஏழைகள் படுந்துயரஞ் சொல்லுதற்கரிதரிது!!! ஒவ்வொருவரும் தனக்கு தேகத்தில் பலமின்றி நோயினுலும பொருளின்மையினுலும், தனக்குதவி செய்பவரின்றியும் வருந்தும்படி நேரிட்டால என்னசெய்கிறதென்று புத்தி பூர்வமாயோசிக்கும்பொழுது, ஐயோ! சுவாமி! ஒருவருமெனக்குதவி செய்யவில்லையே, பலமுமில்லையே, ஐவேசுமில்லையே, என்னசெய்வேன், தெய்வமே! என்று நொந்துகொள்ளும்படி நேரிடுமல்லவா வென்பதைத்தெரிந்து தருமஞ்செய்யவேண்டும். வேலைசெய்ய சக்தியுள்ளவனுயிருந்தால், அவனுக்கு வேலைகொடுத்தாகிலும், அல்லது நீ வேலைசெய்து பிழைக்கக்கூடாதாவென்று புத்திமதி சொல்லி.பிச்சையிட்டனுப்பவேண்டுமேயன்றி, துரத்திவிடக்கூடாது. இதுகாரணம்பற்றியே, ஔவையார்,

"ஐயமிடுமின்னற நெறியைக்கைப்பிடிமின்"

என்றும், பட்டிணத்து சுவாமிகள்,

"பசித்தோர் முகம்பார், நல்லறமு நட்பு நன்றென்றிரு,"

என்றும்,

"ஈயாமனிதனை யேன் படைத்தாய்சச்சி ஏகம்பனே"

என்றும் மற்றும் பெரியோர்களும் இம்மாதிரியே கூறியுள்ளார். இது இப்படி இருக்க, தாங்கள் தருமங்களை நூதனமாய்ச் செய்யாவிடினும் இதற்குமுன் பெரியோர்களால் ஏற்பட்டிருக்குந்தருமங்களை முறைதெரியாமலழித்தும், சுயப்பிரயோசனஞ்செய்துகொண்டும், சுவாமி காரியத்திற்கென்று ஊரூராய்ச்சுற்றிப் பொருள்பரித்து அப்பொருளைக்கொண்டு தங்கள் குடும்பகாலக்ஷேபங்களை நடத்தியும, வேசிதாசி முதலானவர்கட்களித்தும், அளவிற்கு மிஞ்சி விதம விதமான பாவங்கள் செய்தும், வீண் வியவகாரங்களை வம்புக்காகிலுமிழுத்து விட்டுக்கொண்டு வீண் செலவு செய்து வரும பிரபு

க்களுக்கு என்னகதி கிடைக்குமோ வது சொல்லற்கரிது. பின்னும் சிலர் பிரபுக்களென்று பேர் மாத்திரம் வைத்துக்கொண்டு தேவாலய சொத்துக்களெல்லாம் தம்தம் மனம்போனபடி செலவழித்தும், நித்திய பூசை உற்சவாதிகள் முதலிய தருமங்களை யெல்லாஞ்செய்யாமலும், அன்னசத்திரமுதலிய விடங்களில் அன்னதானுதிகளை நிறுத்தியும் தங்கள் தொந்திபருக்கத்தினறு துஷ்கிருத்தியங்களைச் செய்துவருகிறவர்களைத்தகுந்த விதமாய்க் கண்டிக்க சர்க்காரிலும் தக்க விசாரணையின்றி இருக்கிறது. மேலும் மனிதனுடைய ஆயுளோ,

"நெருநல் உளனொருவனின் றில்லையென் றும்
பெருமையுடைத்திவ்வுலகு,"

என்ற பெரியோர் வர்கருக்கிணங்க, பேதி, பிளேக், மாரி முதலிய பலவகைக் காரணங்களினல் நிச்சயமில்லாமலிருககிறது. நாமிருக்கும்வரை செய்வதுதான் நிச்சபம்; பிறகு செய்யலாமென்று சொல்லுதற்கிடமில்லை; இதுகாரணம்பற்றியே,

"சென்ற நாளெல்லாஞ் சிறுவிரல் வைத்தெண்ணலா
நின்றநாள் யாவர்க்குமுணர்வரிது—என்றொருவன்
நன்மைபுரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்."

என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். தருமத்தின் காரணத்தினலேயே இப்போது உண்டாகும்படியான விசித்திர ரோகங்கள் இதற்குமுன் கிடையா; நீர்வளமும் நிலவளமுமிதற்குமுன் அதிகம்; இப்போது தருமக்குறைவினல் அனேக விபரீதங்களெல்லாம் தோன்றுகின்றன. அவைகளெல்லாவற்றையும் நாம் மாற்ற முடியாதென்ருலும் நம்மால் கூடிய தருமங்களை அப்போதைக்கப்போது நாம் செய்யலாமல்லவா? தருமஞ்செய்யாவிடின் நற்கதியில்லை; தருமத்திற்சென்றிருக்கும் பொருளையழித்தும் தருமத்திற்கென்று வீண்வேஷம் போட்டுத்திரிந்து பொருள்பரித்துத்தங்களிஷ்டப்படிக்கெல்லாம் செலவழிப்பவர்கட்குத் தானென்னகதியோ! ஏனிவ்வாறு வீண் பாபங்களை மூட்டை மூட்டையாய்க்கட்டி சுமக்கின்ருர்களோ!

"அருளிலார்க்கவ்வுலகமில்லை பொருளிலார்க்
கிவ்வுலகமில்லாதியாங்கு."

என்றுபெரியோர் பிரத்தியக்ஷவிஷயத்தை உபமானமாக வைத்து அனுமானத்தைக் கூறியிருக்கின்ருர்களே! அந்தோ!

ஆதலின், நம்மவர் எல்லோரும் மேற்கூறியவண்ணமில்லாமல், கடவுள் ஒருவருளர் என்று பயந்து தங்களாலியன்ற அளவு தருமஞ்செய்யவும்,

நல்வழியில் நடக்கவும் இவ்விஷயத்தை இங்கு கூறலாயிற்று. நாம் தருமஞ் செய்தாலென்ன செய்யாமற்போனாலென்ன இவனேனிதைப்பற்றி எழுதவேண்டுமென்று வினவின், தருமஞ்செய்தால் செய்பவருக்கு மாத்திரமின்றி ஏனையோருக்கு மது உபயோகப்படுமாதலின்,

"தொல்லுலகில் நல்லாரொருவருளரே
லவர்பொருட்டெல்லோருக்கும் பெய்யுமழை"

என்று இருத்தலால் தருமஞ் செய்யாதவர்களுஞ் செய்யவேண்டுமென்பது எமது நோக்கமானதுபற்றி இவ்வாறு சிலபாகத்தைப்பற்றி இங்கெழுதத்துணிந்தனம், பிசகேதேனும் காணப்படுமாயின் சாதுக்கள் மன்னித்து குணத்தைமட்டும கிரகித்துக்கொள்வார்கள் என்பது திண்ணம். சுபம் சுபம் சுபம்.

அறங்காப்போன்.

கூரைகள்

தார்சுக்கூரைக்காகவே ஏற்பட்டிருக்கும் செங்கற்களை கட்டிடத்துக்கு கோணநோக்காய் (Diagonally) கண்டிககல் ஊன்றுவதுபோல் சுண்ணும்பால் கட்டவேண்டியது. அவ்விதக்கற்கள் 6 அங்குல நிகளமும், 3 அங்குல அசலமும், ஒரு அங்குல கனமுமிருக்கவேண்டியது இவ்விதம் போட்ட பின்பு சுண்ணும்பாலும், செங்கல் ஜல்லிகளாலும் கலந்த கான்கரீட் (concrete) மூன்று அங்குல கனம்போட்டு, இரண்டு அங்குலமாகும்வரையும் நன்ருய்த்தட்டவேண்டும். இவ்விதஞ்செய்யுமபோது உலரவிடாது ஜலத்தை தெளித்துக்கொண்டுமிருக்கவேண்டியது, இங்ஙனஞ்செய்தபின்பு 6 அங்குல நிகளம், 3 அங்குல அகலம், $\frac{3}{4}$ அங்குல கனமுள்ள ($6'' \times 6'' \times \frac{3}{4}''$) சதுர ஓடுகளைக்கொண்டு இரண்டுவரிசை தளவரிசை சுண்ணச்சாந்துடன் (mortar) போட்டுப்பிறகு, 6 அங்குல நிகளம், 6 அங்குல அகலம், $\frac{1}{2}$ அங்குல கனமுள்ள ($6'' \times 6'' \times \frac{1}{2}''$) சதுர ஓடுகள் கொண்டு 1 வரிசை, அதாவது மூன்ரும் வரிசை சுண்ணச்சாந்துடன் போடவேண்டும்; இவ்விதம்போடப்பட்ட மூன்று வரிசையின் கனத்தையும் கணக்கிட்டுப்பார்த்தால் இரண்டங்குலமென ஏற்படும். இதுவும் போட்டபிறகு மேல் தளத்தில் பூச்சுவேலை செய்யவேண்டும். இது ஒரு அங்குல கனமிருக்கவேண்டுமென்ருலும், மூன்று தடவைகளில், முதல்தடவை $\frac{1}{2}$ அங்குல கனம் வைத்தும், பிறகு இரண்டுதடவைகளிலும் கால் கால் அங்குல கனமுமாகப் பூசுதல் வேண்டும். முதல் பூச்சுக்கு சுண்ணும்பு ஒரு பங்கு, ஆற்றுமணல் $1\frac{1}{2}$ பங்கு மாக நல்லதண்ணீரில் கலந்து இடித்து, வெல்லத்தண்ணீரில் கலந்து பூசுதல் வேண்டும். இவ்விதம் பூசியபிறகு, இரண்டாவது பூச்சுச்சுண்ணு

ம்புடன் சரிக்குச்சரி ஆற்றுமணல் கலந்து இடித்துப்பூசப்படவேண்டும். மூன்றாவது பூச்சு, ஒரு பங்கு மணலுக்கு நான்கு பங்கு சுண்ணும்பு சேர்த்து நன்றாய் அரைதது, ஒரு பரைச்சுண்ணும்புக்கு (one parch) பனிரெண்டு மூட்டையும் 1½ படித்தயிறுமாகச்சேர்த்து அத்துடன் கலந்து மணியாசிப்பலகையால் தடவிச்சமமாகத்தேய்த்துவிடவேண்டியது. முதல் பூச்சுப்பூசி சுமார் பத்து நாள் வைத்திருந்து பிறகு இரண்டாவது பூசுதலும், பிறகு இரண்டுதினத்துக்கெல்லாம் மூன்றாவது பூசுதலுஞ் செய்யவேண்டும். இவ்விதஞ்செய்வதுந்தவிர வேறு விதமும் செய்யலாம். அஃதெப்படியெனில்:—முதல் பூச்சு பூசியபிறகு சுடவைத்த தார் எண்ணெயை மணலுடன் கலந்து பூசிவிடுவதுடன் இரண்டு தரம் சுண்ணும்புமடித்து விடுவதுந்தான்.

தாரிசுக்கூரையின் கனம் 8 அங்குலம். அதின் விவரம் அடியில் வருமாறு காண்க.

				அங்குலம்.
தாரிசு செங்கல்	...	...	...	3
மூன்றங்குல கான்சரீட் இரண்டங்குலமாகச்செய்தது			...	2
ஓடுகள்	...	...	...	2
பூச்சுவேலை	...	...	...	1
			ஆக	8

இற்க தாரிசுச்கூரை தற்காலம் சென்னப்பட்டணமுதலிய நகரங்களில்கூட திராவியின் மீது சிறு மரவரிச்சல்களை (fillets) ஆறங்குலத்துக்கொன்றாக நெடுக்கு வசத்தில் ஆணிகளாலிணக்கி அதன்மீது கான்கிரீட் ஓடுகள் பூச்சு வேலைகளான் முடித்து விடுகின்றனர்; இங்ஙனஞ்செய்தலால் அதிகப்பணச் செலவேயன்றி பலகைகளும் பழுதுறுகின்றமையால் இவ்விதம் கட்டுதல் கூடாது. தாரிசுக்கூரை விரிசல் காணுவதற்குப் பலகாரணங்களுண்டு. கட்டிடத்துக்கு உபயோகப்படுத்தப்படும்மரம் விளைவதினாலும் மேற்சாமான்கள் சரியாகக்காயாமல் கெடுதலான வேலைகளைக்கெட்ட சாமான்களைக் கொண்டு செய்வதினால் கெடுதியே உண்டாகின்றன.

சிறிது ஜாக்கிரதை எடுத்துக்கொண்டு ஆரவைத்த மரங்களையும், நல்லசாமான்களையும், நல்ல வேலைப்பாடுள்ளதாகச்செய்தால் கெடுதல் நேராது.

கூரைகளில் விரிசல்கண்டு ஜலம் ஒழுகுமேயானல் கூரையின் மேல் தளத்தில் பழுது பார்க்கப்பல சாதனங்களுள; சாதாரணமாய் முரட்டுத் துணியை விரிச்சலின்மீது விரித்துத் தார் எண்ணெயைப்பூசுவதனுலாவது, தட்டோடுகளைப் புறக்கவிவானபாகத்தை மேல் புறமாக வைத்தலாலாவது ஜலம் ஒழுகாமல் தடுக்கலாம்.

ஆயினும், (1) குங்கிலியத்தையும், தார் எண்ணெயையுங்கலந்து பூசுதல்; (2) கல்கட்டி (pitch), நீலக்கீல், மணல் (sand) இம்மூன்றையுஞ்சேர்த்துப்பூசுதல்; (3) அகத்தி எண்ணெ இரண்டுசேர், குங்கிலியம் இரண்டு சேர், கிட்டக்கல் ஒரு சேர் ஆகிய இவைகளைச்சேர்த்துப் பூசுதல், அகத்தி எண்ணெ 15 (℔) பவுன், பஞ்சு 3 அவுன்ஸ, நீர்த்த சுண்ணும்பு 3 (℔) பவுன் ஆகிய இவைகளைச் சேர்த்துப் பூசுதலே பழுது பார்ப்பதற்கு முக்கிய சாதனங்களாம்.

முன்கூறிய இரண்டு விதங்களும் சூட்டோடு விரிசலின்மீது பூசப்படவேண்டும்; மூன்ருவது விதத்தில், கிட்டக்கல்லையும், குங்கிலியத்தையும் நன்ருகப்பொடியாக்கி அகத்தி எண்ணெயுடன் கலந்து பூசவேண்டும். நான்காவது விதத்தில் பஞ்சைத்துண்டுதுண்டாகச்சேதித்து அகத்தி எண்ணெ நீர்த்த சுண்ணும்புடன் கலந்து பசையாகும் வரையில் அரைத்துப்பூசுதல் வேண்டும். பலவிடங்களில் ஜலம் ஒழுகுமேயாகில் கூரையைப்பிரித்துக்கட்டுவது வெகுநன்மையைத்தரும்.

இன்னும் வரும்.

S. A.

அநவத்யா.

"பிராணநாதா!

'அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை'

என்றபடி அறம், பொருள், இன்பம் என்னுந்திரிவர்க்கங்களையும், சாங்கமாயறிந்து அனுபவித்து இவ்வில்வாழ்க்கையாகிற வான்சகடத்தைத்தங்களிடம் நீங்காவன்பினையுடைய மனைவியாகிய நானும், பர்த்தாவாகிய தாங்களும் மனதொருமித்து இழுத்து நடத்திக்கொண்டு வரல்வேண்டுமென்றும்; நம்மிருவருடைய மனம் ஒருமைப்படாமல் நம்மிருவரில் ஒருவர் மாத்திரம் அதை இழுக்கமுயன்ருல் அதுநடவாமல் தடைப்பட்டுப்போய்விடுமென்றும்;

'மருவியகாதன் மனையாளுந்தானு
மிருவரும் பூண்டிர்ப்பினல்லால்—ஒருவரா
லில்வாழ்க்கையென்னுமியல்புடையவான் சகடஞ்
செல்லாதுதெற்றிற்று நின்று;'

என்று நெறிவல்லோர் கூறியிருக்கின்றனரென்றும்; இல்லற தருமத்தை நன்குணர்ந்து நடத்திவரும் சதிபதிகளிருவரும், முத்தியைப்பெறவேண்டிக்காடுகளில் கொடிய தவஞ்செய்யும் துறவிகளை விட சிரேஷ்டமானவர்களென்றும்; இல்லறத்திலிருந்து வருவதினால் நாம் கேவலம் மனிதராயிருப்பினும் தேவலோகத்தில் வசிக்கும் தேவர்களைப்போல மதிக்கப்படுவோமென்றும்; இதற்கு விதி

'வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

என்பதுவே என்றும் எனக்குத்தாங்கள் கற்பித்த வண்ணம், நான் வைகறையிற்றுயிலெழும் பொழுதே பர்த்தாவாகிய தங்களுடைய ஆயுள் விருத்திக்காகத் தினந்தோறும் கடவுளைபிரார்த்தித்துக்கொண்டே எழுந்து; ஸ்நான பானாதிகள், ஸந்தியாவந்தனாதி அனுஷ்டானங்கள், ஔபாஸன அக்னி ஹோத்திராதி கர்மங்கட்கு யாதொரு குறைவன்னியில் தங்கள் மனக்குறிப்பறிந்து, சாஸ்திர சம்மதத்திற்கணுவளவேனும் பிசகாமல் நடந்து வருகிறேன்: கொழுநனுடைய சுகம், துக்கமில்லாளைச்சார்ந்ததாகையால் கிரகக்ருத்ய விஷயமான சகல பாரத்தையும் நானே வகித்துத்தங்கட்குக் கவலையென்பதே யில்லாமல் பார்த்து வருகிறேனன்றோ! நான் அனுஷ்டிக்கும் நோன்பு, விருதம், தானம், தருமமுதலியதுகள் தங்கட்கு என்னிடமுள்ளவன்பினாலன்றோ நடந்து வருகின்றன; சுற்றத்தார், மித்திரர், அதிதி, அப்யாகதர்களை எந்தெந்த விதமாய் உபசரித்துத்திருப்தி செய்யவேண்டுமோ, அந்தப்படி செய்து வருகின்றேன்; தாங்களென்பேரில் பரிபூர்ணமான வன்புவைத்து பிரியநேசராக விருக்கிறவரையில், எனக்கு யாதொரு குறைவுமில்லை; நம்மிருவர் அன்பு மாறாமல் எக்காலத்தினும் பிரியாநேயர்களாயிருந்து வரல் வேண்டுமென்பதே எனது நோக்கமென்று தாங்களறியாததோ! ஆனால், என் மனத்துள் இப்பொழுது ஓர்விதமான சிந்தை மேற்கொண்டுளது; அஃதென்னையெனின்:— நாம் நாள்தோறும் செய்த காரியங்களையே செய்தும், அனுபவித்தவைகளேயே யனுபவித்தும், வருவதினால் அடையத்தகுந்த பிரயோஜனம் ஒன்றையுங்காணோம், இனி கடவுட்கியன்ற வழிபாடு செய்து நாமிருவரும் ஏககாலத்தில் கதியடையக்கருதியுள்ளேன்; ஆனால் நம்முடைய சரீரத்தின் நிலைமையோ,

'நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே?'

என்றபடி, அநித்தியமான சரீரத்தை நம்பி வீணே மோசம் போகலாகாது. திநகரன் தினந்தோறும் அஸ்தமனமாகும் போதெல்லாம் நம்முடை வாழ்நாட்களில் ஓர் நாளைக்கழித்துக்கொண்டே வருகின்றானன்றோ! நீரிற்குமிழி நீர்மேலெழுத்துப்போன்றது நம்முடைய வாழ்வு; முடிசார்ந்த மன்ன மன்னவர்களும், மற்று முள்ளவர்களும் முடிவில் ஒரு பிடி சாம்பராய் வெந்து மண்ணுவதுங்கண்டு பின்னுமிந்தப்படி சார்ந்த வாழ்வை நினைப்பதை விட்டு, பொன்னினம்பலவரடி சார்தலன்றோ நன்றாகும்; காடோ, செடியோ, கடற்புறமோ, கனமே மிகுந்தநாடோ, நகரோ, நகர் நடுவோ, நலமேமிகுந்த வீடோ, புறத்திண்ணையோ யிவ்வுடல்விழுமிடம்? அதிலும் நம்மி

ருவருடைய உடலும் ஒரே நாளில் விழுகிறதென்பதுதான் என்ன நிச்சயம்? அப்படியே விழுந்தாலும், மறுபடி இக்கர்மபூமியில் ஜனிக்காது நான்காவது வர்க்கமாகிய மோக்ஷத்தை யல்லவோ அடைய வகை தேடல்வேண்டும்? ஆகையால், இச்சிற்றின் பசுகத்தை யொரு பொருளாய்க்கருதாமல் ஆசையையொழித்து, சதா ஈசுவரத்யானபரர்களாய் முக்தி ஹேதுவானகாரியத்தைச் செய்யப் பிரயத்தினப் படவேண்டும். அம்முக்தி நம்மில் ஒருவருக்கு முந்தியும், மற்றவருக்குப்பிந்தியும் சித்திக்காமல் ஏககாலத்தில் நம்மிருவருக்கும் சித்திக்கு மாறு வழிதேடல் வேண்டும். என்று வணக்கமாய்க்கேட்கும் தன் பத்தினியைப்பார்த்துத் தபோ நிஷ்டரான நாதசர்மா வென்னு மந்தண சிரேஷ்டரானவர், "பிரியே! சாருசீலே! அநவத்யே! இன்றுதான் நான் கிருதார்த்தனுயினேன்; தேவாமிருதம போன்ற உன் மொழிகளைக்கேட்டா நந்தங்கொண்டேன்; உனது திட பக்தியைக்கண்டு மெச்சினேன்; இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையாதாகலின், செல்லுந்தேயத்திற்குறு துணைதேடல் வேண்டுமென யானிது காறுந்தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தபடி, பேதையாகிய நீயுமென்மனக்குறிப்பறிந்தோ அல்லது சுவயமாக வேதாஞே இன்று நன்மொழி கூறினை? இனி நமக்கோர் (குறைவுமின்று;பரபிரமசுவரூபியான பரமசிவனுடைய சாயுஜ்யங்கிடைக்குமென்பதிலையம்யாதுளது? பக்திமயமான உன்னுடலோடு கலந்த என்னுடல் பயனடைந்தது; அத்யாச்சரியமடைந்தேன். சா (சா) ருமதியைப்படைத்த வ, பிராணசகி ! அநவத்யே! உத்தரதேயத்தின் கண்ணுதித்த வோரழகிய வந்தணச்சிறுமி, நல்ல அழகுஞ்சம் பத்தும் வாய்த்த ஓர் சிறுவனை மணந்தும், முன் செய்த புண்ணியவசத்தால், தன் சிற்றின்பானுபவத்சுகத்தைக் கொஞ்ச மேனும் கருதாது,

'தீயாலோ நீராலோ தேர் வேந்தர் தம்மாலோ
மாயாத தெவ்வர்வலியாலோ— யாதாலோ
விப்பொருள் போய் மாய்கின்றதென்று பொருள்வைத்தார்க
ளெப்பொழுது நீங்காரிடர்;"

என்றபடி ஆடையாபரணுதிகளைத் துறந்து,

'பிறந்தோருறுவது பெருகியதுன்பம்
பிறவாருறுவது பெரும் பேரின்பம்;

என்பதை மணதிலுறுதியாகக்கொண்டு இஹப்பற்றுள்ள யாவத் பாசத்தையுந் தீரத்துறந்து கிழக்கே சர்வோத்கிருஷ்டமாய் விளங்குகின்ற கௌரீமாயூர க்ஷேத்திரமடைந்து, காவேரியாற்றில் நீராடியும், ஆங்கு சானித்தியமாயிருக்கிற சிவமூர்த்தியைத் தரிசித்தும், சின்னுள் கழித்து இருவரும் முக்தியடைந்தனர். அவ்வாறே நாமும் நம்மில்லம் விட்டகன்று, அத்திவ்வியக்ஷேத்திரஞ் சென்று, பரமசிவனுடைய சாரூப்யத்தைப் பெற்று சாயுஜ்ய பதவியையு மடைவோமாக. கடவுள் நம்மிருவர் மீதருள் நோக்கமுடையவராய்ப் பெறுதற்கரிய பரம கைவல்யத்தைத் தருவார்;" என்றார்.

பராசக்தியைப் போன்ற அநவத்யாதேவியானவள் கணவன் வார்த்தையைக் கேட்டு அடங்காத ஆநந்த வாரிதியில் மூழ்கி அப்பொழுதே மோக்ஷ சாம்பிராஜ்யத்தை யடைந்ததாக மனதிலெண்ணி, ஸ்ரீசாம்பஜடாதரராகவே.தன்கொழுநனைப்பாவி

த்து நமஸ்கரித்துச் சொல்லுகின்றாள். "தபோநிதியே! அடிச்சியேன் செய்த புண்ணிய பலத்தினால் தங்களை நான் நாயகனாய்ப்பெற்றேன். மேலும்,

'அறமே மறங்கண்முழுதழிக்கு மறமே கடவுளால கேற்று
மறமே சிவனுக்கொருவடி வமாகுஞ் சிவனை வழிபடுவோர்க்
கறமே யெல்லாப் பெரும்பயனு மளிக்கும் யார்க்குமெவ்விடத்து
மறமே யச்சந்த விர்ப்பதென வறைந்தான் சாதாதப முநிவன்,

என்பதை மனதிற்கொண்டு தருமத்தையே உறுதியாய் நம்பி யான் ஒழுகிவந்தமையால், தாங்களுமனதொருமித்து நடத்தி வந்தீர்கள். மின்னலைப் போலழியுமிவ்வுடலைக் கொண்டு நல்வினையே செய்யவேண்டுமென்ற எண்ணம் படைத்த யான் கோரியகோரிக்கையை ஈடேற்றத் தாங்களிசைந்த பாக்கியத்தைவிட வேறென்ன வேண்டும்?" என்றிருவரும் தங்கள் கிரகத்தைவிட்டுப் பயணம் புறப்பட்டு அனேக காடு மலை வனம் வனாந்தரங்களைக் கடந்து கௌரிமாயூர க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள்.

அங்கோடும் புண்ணிய நதியைப்பற்றிய விருத்தாந்தத்தைக் கேட்க விரும்பிய அநவத்யா தேவியானவள், தன் கொழுநரை நோக்கி, "என் மீது கருணை வாய்ந்த குணசீல! மிகவும இரமணீயமாயோடும்இம்மகா நதியில் நன்னீராடி, இங்காவிர்பவித்திருக்கும் ஈசுவரனைச்சேவித்து நம்மொழுக்க முந்தவறாது நடந்து வருகின்றோம். ஆயினும், இந்நதியைக் காவேரியாறென்று கூறும் வரலாறுதானென்னோ? இதன் பிரபாவத்தைச் சற்றே கேட்க விரும்புகின்றேன்." எனலும், நாதசர்மா, "அடி என் தவமே உருவாய்க்கொண்ட என் கட்டழகி! கேள்! பூர்வத்தில் கவேர மகாராஜன் சந்ததியை விரும்பி பிரமனைக்குறித்துத் தவமியற்றி, அவனதருளால் திவ்ய தேஜோவதியான ஓர் கன்னிகையைப் பெற்று, காவேரி என்று நாமதேயமிட்டு, மிகவுஞ்செல்வமாய் வளர்த்து வரும் நாளில், அப்பெண்மணிக்குத்தக்க பருவம்வாய்த்தவுடன் மகாராஜாவுக்கு ஞானோதயமாகி முக்தி யெய்தினன். உடனே காவேரிதேவியானவள் உலகத்தில் சர்வோத் கிருஷ்டமான புருஷனெவனோ அவனை மணம்புரிகிறதென்று கான் புக்கி பரமனைக்குறித்துக் கடுந்த வமியற்றி வருங்கால், அகஸ்தியமாமுனிவர் காவேரியின் முன்றோன்றி, "ஏ, கன்னிகாரத்நமே! நீ என்னை மணம் புரிவாயாக. உன் கோரிக்கைபடி சர்வோத்க்ருஷ்டமான புருஷன் யானே. ஈசுவரனுக்குப்பின் என்னைத்தவிர ஒருவரும் இல்லை," என, காவேரி "ஏ, முனிவர! நீர் சர்வோத்க்ருஷ்டமானவரே ஆனால் என் மனோபீஷ்டத்தை நிறை வேற்றினால் என்னை மணம் புரிந்து பாரியையாகவடையத் தடையில்லை" என்றாள். அதற்கு அம்முனிவர், "உன்னிச்சை எதுவோ? வென, மின்னற்கொடியாளான அம்மங்கை சொல்லுவாளாயினள்.

(இன்னும் வரும்.)

கோர்ட்டு அமீனாக்களும், படிச்சேவகன்களும்

ஏழைகள் நியாயஸ்தலத்தில் வழக்கிடுவதற்குச் செலவிற்குப் பணமின்மையால், பணக்காரர்களுடைய நிர்ப்பந்தத்தினால் தாங்கள் பெறக்கூடிய

நியாயத்தை இழந்துவிடுகிறார்கள். சுவல்ப ஐவேஜுள்ள சிலரோ, கஷ்டத்துடன் வக்கீல்களிடத்தும், அவர்கள் குமாஸ்தாக்களிடத்தும் தங்கள் கையிலியன்ற பணத்தைக் கொடுத்து வழக்கிட்டால், மேலே குறிப்பிட்டவர்கள் உபத்திரவிப்பதினால் அவர்களைப் பிணந்தின்னிக் கழுகுகளென்றே சொல்லலாம். அவர்கள் கிராமங்கள் தோறும் கட்சிக்காரர்களைப் பிடுங்கித்தின்று உபத்திரவஞ்செய்வது முழுவதையும் இங்கெழுத இடமுமில்லை, சாத்தியமுமில்லை. வெகுபாடுபட்டுத் திண்டாடித் தெருவில் நின்று பணத்தைச் சம்பாதித்து ஒருவன் தாவாசெய்து பிரதிவாதிகட்கும் சாட்சிகட்கும் சார்வுசெய்யும்படி கட்டளைகள் கொண்டுவந்தால் அவைகளைச் சரியானபடிசார்வு செய்யாமலும், உபயவாதிகளையும் லஞ்சங்கொடுக்கும்படி நிற்பந்தம் பண்ணியும், மிகுதியாக அளிக்கும் கட்சிக்காரர் கட்கனுகூலமாய் மற்றொரு கட்சிக்காரர் கட்கு பிரதிகூலமாய் கட்டளைகளை நிரைவேற்றாமலே ரிட்டரன் செய்துவிடுகிறார்கள். இதற்குக் கிராம உத்தியோகஸ்தர்களும் தங்கள் பங்கைப் பெற்றுக் கொண்டு சாதகமாயிருக்கிறார்கள். இப்படி அதிககஷ்டப்பட்டு முடிவில் வாதியோ, பிரதிவாதியோ அனுகூலமான தீர்ப்பைபெற்று அத்தீர்ப்பை நிரைவேற்றுமாறு வாரண்டோ, ஜப்தியோ, ஏலமோ, சொத்துக்களை சுவாதீனஞ் செய்யவோ கட்டளைகள் கொண்டுவரும் அமீனுக்கள் அல்லது சேவகர்கள் மேற்கூறியவாறே லஞ்சத்தின்மீது ஆசைவைத்துக் காரியக்குந்தகம் பண்ணிக் கட்சிக்காரர்களைப் பலவிதமான அவசியமில்லாத செலவிற்கும் நஷ்டத்திற்கும் பாத்திரர்களாக்குகின்றார்கள். அவர்கட்கு இராஜாங்கத்தாரால் தக்க சம்பளமுமேற்பட்டிருக்கின்றது. வெளியில் சஞ்சரிக்கும்போது நியாயமான படியுமேற்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் மேற்கூறிய கொடுமைகளைக் கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் கல்லடிமங்கர்களைப் போல செய்கிறார்களே! அந்தோ! அவர்கள் குடும்பிகளல்லவா? தங்கள் சுகதுக்கம்போல் அல்லவாபார்க்கவேண்டும்? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நியாயமாய் நடந்தாலே போகுமிடங்களில் திருப்தியாய்ப் போஜனங்கிடைக்குமே! படிப்பணமிகுதிதானே! இராஜாங்க நியாயாதிபதிகளும் இவர்கள் வாக்கியங்களை வேதவாக்கியங்களாகக் கருதுவதனாலன்றோ இவர்களுக்கும் தாங்களடிக்கும் கொட்டம் பலிக்கிறதென்றே எண்ணிக்கொத்திப்பிடுங்குகிறார்கள்; ஆயினும், இப்பொழுது வரவர இவர்களுடையஉபத்திரவமே மேலிட்டு கட்சிக்காரர்கள் மிகவும் வருந்துகிறார்கள். ஆகலின் இனி ஒவ்வொரு நியாயாதிபதிகளும் மேற்கண்டவர்களுடைய நடத்தையைக் குறித்துக்கவனம்வைத்துக் கட்சிக்காரர்கள் சுகமெய்துமாறு தக்கஏற்பாடுசெய்வார்களென்று நம்புகிறோம்.

INVALUABLE HINTS FOR DOCUMENT WRITERS.

தஸ்தாவேஜு எழுதுகிறவர்கட்கு வேண்டியகுறிப்புகள்.

II. விக்கிரய பத்திரம் (Sale Deed.)

1. விற்பனை என்பது ஒருவன் சொத்தை மற்றொருவருக்கு ஒப்படை செய்வதென்பது.

2. கிரய சாஸநங்கள் ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன் 17 (b) (Section 17 (b) of Registration Act) படிக்கும், டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் செக்ஷன் 54 (3) (Section 54 (3) of Transfer of Property Act) படிக்கும் ரூ. 100க்கு மேற்பட்டும், உள்பட்டும் ரிஜிஸ்த்ரேஷன் அவசியம்.

3. விக்கிரய நிலங்கள் கவரன்மெண்டு நிலமாயிருக்கும்பக்ஷத்தில் அதற்கு விற்றவன்பேரில் இருக்கும் பட்டா பாத்தியத்தைக்கிரயம் பெற்றவன்பேரில் மாற்றும்படி ரிஜிஸ்தராகுங்காலத்தில், ரிஜிஸ்தரேஷன் ஆபீசரிடம விண்ணப்பங்கொடுத்துக் கொண்டால், அதை அவர் அந்தத்தாலூகா கச்சேரிகளுக்கு அனுப்பிவிடுவார்; உடனே பட்டா மாற்றப்படும். பட்டா விண்ணப்ப பாரங்கள் ரிஜிஸ்தரேஷனுபீசில் கிடைக்கும்.

4. கிரயம்பெற்றவர் ரிஜிஸ்தரேஷனுபீசர் முன்பாகவா எந்த முகாந்தரத்தையிட்டாவது அப்பியந்தரப்பட்டால், கோர்ட்டு பீஸ் 8 அணு லேபிள் ஒட்டி வக்காலத்துநாமாவெழுதி, அதில் கிராம முன்சீப் அத்தாக்ஷி செய்து வக்காலத்து பெற்ற வேறொருவர் அவருக்குப்பதிலாக பட்டாமனுவுடன் ரிஜிஸ்தரேஷனுபீசர் முன்னுஜராகி மனுக்கொடுத்தால், அதை அந்தாபீசர் அங்கீகரித்துத்தாலூகாவுக்கனுப்பி விடுவார்.

5. அப்படிச் செய்துகொள்ளுமனுவுக்கு கவரன்மெண்டு நிலமாயிருந்தால் ஒரு அணு கோர்ட்டு பீஸ்லேபிளும், இனும் நிலமாயிருந்தால் 8 அணுகோர்ட்டு பீஸ் லேபிளுமிருக்கவேண்டும.

6. முதலில் ஸ்வாதீன அடமானம் அதாவது போக்கியம் வைத்த சொத்தை, ஸ்வாதீன அடமானம் அல்லது போக்கியம் பெற்ற நபருக்காவது, அல்லது அவரால் மேடோவர் பெற்ற எவருக்காவது, கிரயஞ்செய்ய நேரிடும் விஷயத்தில், பிரதமத்தில் ஏற்பட்டிருக்கிற போக்கிய தஜ்தாவேஜியின் ஸ்டாம்புபோக, இப்போது, போக்கியத்துகைபோக மீதியிருக்கிற கிரயத்துகைக்கு, எவ்வளவு ஸ்டாம்பு வேணுமோ அந்தப்படி வாங்கி எழுதினுல் போதும். புது ஸ்டாம்பு ஆக்ட்டு செக்ஷன் 24 (Section 24 of New Stamp Act).

உதாரணம்:—(ஏ) என்பவன் ரூ 4000 பொறுமான ஒரு நிலத்தை (பி) என்பவனுக்கு ரூ 1500க்கு பிரதமத்தில் அடமானம் அல்லது போக்கியம் வைக்கிறான். பிறகு அதே நிலத்தை (பி) என்பவனுக்கே ரூ 4000க்கு கிரயம் செய்ய நேரிடுகிறது. பிரதமத்தில் ரூ 1500 உள்ள போக்கியதஸ்தாவேஜுக்கு ஏற்பட்டிருக்கிற ஸ்டாம்பு ரூ 15 கிரயத்துகை ரூ 4000-ல் போக்கியத்துகை ரூ 1500 போக மீதி துகை ரூ 2500 க்குள்ளபடி ஸ்டாம்பு ரூ 25 க்கு வாங்கி எழுதினால் போறுமானது. கிரயப்பத்திரம் ரிஜிஸ்தர் செய்யுங்காலத்தில் முந்தின போக்கிய பத்திரத்தையும் கூட ஆஜர் செய்து ஸ்டாம்பு ஆக்ட் 16 வது செக்ஷன் (Section 16 of Stamp Act) படி, பிந்திய ஸ்டாம்பில் சர்டிபிகட் பெற்றுக் கொள்ள வேண்டும்.

7. தஸ்தாவேஜு எழுதுவதற்காக பிரதமத்தில் டிராப்ட் (Draft) தயார் செய்வது வழக்கம். பிறகு சில நாட் சென்று ஸ்டாம்பு வாங்கி அக்குறிப்பின்படி (Draft) அதில் காபி செய்வார்கள். அப்பொழுது டிராப்ட் எழுதின தேதியையே ஸ்டாம்பிலும் தவறுதலாய்ப்போட நேரிடுமல்லவா? அப்படி நேரிடுவதால் தஸ்தாவேஜு பிறந்த தேதி முந்தினதும், ஸ்டாம்பு வாங்கின தேதி பிந்தினது மாய் விடும். இது நம்மவர்கட்குள் பெருங்குற்றமாய்த் தேதியை தித்துபாடு செய்து, இன்ஷியல் (Intial) வைக்கும்படிக்கோ, அல்லது தஸ்தாவேஜின் அடியில் ஷரா எழுதும் படிக்கோ நேரிடுகிறது. இக்குற்றம் நேராதவண்ணம், பத்திரமெழுதுபவர், ஸ்டாம்பு வாங்கின தேதியை ஸ்டாம்புக்குப் பின்புறத்தில் ஸ்டாம்புவெண்டருடைய இன்டார்ஸ்மெண்டினால் அறிந்து, மேற்படி தேதியிலாவது அல்லது அதற்கு முந்திய நாட்களில் எழுதப்பட்டிருக்கிற குறிப்பு (Draft) த்தேதியாயிராமல் ஸ்டாம்பின் தேதிக்குப் பிந்திய தேதியிலாவது பத்திரமெழுதப் படுகிறதா வென்பதை கெவனிக்கவேண்டியது அத்யாவசியம்.

8. சொத்துவிவரம் அடியில் குறிப்பிட்டிருக்கிறபடி எழுதவேண்டும்.

1 டிஸ்திரிகட்டு, சப்டிஸ்திரிக்ட்டு, தாலூகா மாகாணம் இவைகளின் பெயர்.

2 பட்டணம் அல்லது தாய்கிராமத்தின் பெயர், (பட்டணமானால்) முனிசிபல் வார்டு அல்லது டிவிஷனும் (கிராமத்தின் மஜராவானால்) மஜராவின் பெயரும்.

3 அயன், இனும் அல்லது ஜமீந்தாரி.

4 நன்செய், புஞ்செய் தோட்டம் அல்லது வீடு.

5 பைமாஷ், சர்வே, அல்லது முன்சிபல் நம்பர்.

6 சொத்துக்கு குறிப்பிட்ட பெயர் இருக்குமானல் அப்படிப்பட்ட பெயர்.

7 விஸ்தீரணம்.

8 மரங்கள், வீடுகள், கட்டடங்கள், கிணறுகள் முதலியவைகள் இருந்தால் அவைகள்.

9 நான்கு எல்லை.

10 முன் அனுபோகம்.

11 வேறுவிசேஷ விபரங்கள் இருந்தால் அதுவும்.

☞ (a) சர்வை ஆன நிலங்கள் விஷயத்தில், சர்வைநம்பர், சப்நம்பர், அல்லது லெட்டர்கள்.

(b) நிலமானது ஓர் நம்பர், நன்செய், அல்லது புன்செய் நிலத்தின் பாகமாயிருந்து அதற்கு சப்நம்பர் அல்லது லெட்டர் ஏற்படாமலிருந்தால் அந்த நம்பர் நன்செய், அல்லது புன்செயில் எந்தபாகமென்பதும் எவ்வளவு பாகமென்பதும்.

(c) சர்வை ஆகாத நிலங்கள் விஷயத்தில் பைமாஷ் நம்பரும், நிலத்தின் பெயர் இருந்தால் பெயரும், குறிப்பிட்ட பெயர் இல்லாதவிஷயத்தில் சரியான நான்கு எல்லேயும்.

(d) வீடுகள், கட்டடங்கள், காலிமனைகள் விஷயத்தில், தெருவின் பெயரும் தெருவின் இன்னபக்கம், அல்லது சிரேணியென்பதும், நான்கெல்லேயும், முனிசிபாலிட்டியாயிருந்தால் முனிசிபல் நம்பரும்.

(e) விருக்ஷங்கள், கிணறுகள், விஷயத்தில், அவைகள் இருக்கும் நிலத்தின் விபரம மேற்சொல்லிய மாதிரியாகவும்.

(f) பூரா கிராமங்கள் விஷயத்தில், கிராமத்தில் பெரு நான்கெல்லேயும், அதின் சிலபாகமாயிருந்தால், மொத்தம் இத்தனை பாகம் அல்லது பங்கில், இவ்வளவு பாகம் அல்லது பங்கு என்பதும் அதின் விஸ்தீரணமும்

(g) பரிசல், துறைவிஷயத்தில், அந்தத்துறையின் பெயரும், நதியின் பெயரும், அந்ததுறையிருக்கும் கிராமத்தின் பெயரும்,

(h) பாசிவிஷயத்தில் அதுசம்பந்தமாயுள்ள நதியின் பெயரும், இது முதல் இதுபரியந்தம் என்பதும், குளங்கள், ஏரிகள், கிணறுகள் ஆனல் அவைகளின் நான்கு எல்லேயும் கிராமத்தின்பெயரும்.

(i) நடைவழி முதலான பாத்திய விஷயத்தில் இன்னவிதமான பாத்தியம் இன்னசொத்திற்குடையவருக்கு இன்னசொத்தில் உண்டென்பதும்.

இவ்விதமாய் மேல்கண்ட விபரங்கள் பூராவும் கண்டு தஸ்தாவேஜ்கள் கண்டு எழுதப்படவேண்டும்.

9. தஸ்தாவேஜை ஸ்டாம்பு காகிதத்தில் பட்டையாய்த் தலப்பில் முத்திரை போட்டிருக்கும் பக்கத்தில் எழுதவேண்டும். ஸ்டாம்புவெண்டர் இண்டார்சுமெண்டும் ஓர் சிருசீலும் மறுபக்கத்தில் காணப்படும். அந்த பக்கத்தில்தான் ஸ்டாம்புவெண்டரின் விற்றுமுதல் இண்டார்சுமெண்டிற்குங்கீழே ரிஜிஸ்தர் செய்யுமாபீசர் இண்டார்சுமெண்டெழுதுவார். அந்த பக்கத்தில் தஸ்தாவேஜை எழுதவேகூடாது. மேற்கூறியவண்ணம் தஸ்தாவேஜை முன்பக்கத்தில் முடியாவிட்டால் வேறு டிம்மி கடிதஞ்சேர்த்து எழுதிமுடிக்கலாம், அப்படி எழுதும்போது தஸ்தாவேஜின் பிரதிபக்கத்திலும் பத்திரம் எழுதிக்கொடுப்பவர், சாட்சிகள், நெட்டெழுத்துக்காரர் (Document writer) இவர்களுடைய கையொப்பமிட்டிருக்கவேண்டும். பத்திரம் எழுதிக் கொடுப்பவருடைய கைப்படவே எழுதவுமெழுதலாம். தஸ்தாவேஜை எழுதும் போதே மேற்சொன்ன பேர்களுடைய கையொப்பங்களிட, இடம் விட்டு எழுதவேண்டும். தஸதாவேஜை எவ்வளவு ரூபாயுள்ள ஸ்டாம்பு கடிதத்திலிருக்க வேண்டுமோ அந்த ஸ்டாம்பு, ஸ்டாம்பு வெண்டரிடம் (Stamp Vendor) இல்லாதிருக்கிறது முண்டு. அந்தஸடாம்பு மதிப்புக்குள்ளபடி ஸ்டாம்பு காகிதங்களைச் சேர்த்துஸ்டாம்பு வெண்டர்கள் தங்களிண்டார்ஸ மெண்டுடன் ஸர்ட்டிபை செய்துக் கொடுப்பார்கள். அவற்றுள் எந்த ஸடாம்பில் "அந்த ஸடாம்பில் தஸதாவேஜை எழுத ஆரம்பிக்க வேண்டும்" என்று காணப்பட்டிருக்கிறதோ, அந்த ஸடாம்பில் தஸ்தாவேஜை எழுத ஆரம்பஞ் செய்ய வேண்டும்.

10. தஸ்தாவேஜு பிறந்த தேதிமுதல் 4 மாதத்துக்குள் ரிஜிஸ்தர் செய்ய தாக்கல் செய்யவேண்டியது. (ரிஜிஸ்திரேஷன் ஆக்ட் செக்ஷன் 24)

11. தஸதாவேஜை எழுதிக்கொடுப்பவர்களாவது அல்லது வாங்கிக்கொள்பவர்களாவது தாக்கல் செய்யலாம். அவர்களுக்கு இருக்கும் அவசியமான வேலைத்தொந்திரவினுலாவது, அல்லது வேறு எவ்வித முகாந்திரத்தினுலாவது நேரில் ஆபீசுக்கு வந்து ஆஜராக முடியாவிட்டால் அவர்களிடம் அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள் தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர் செய்யும் ஆபீசரிடம் தாக்கல் செய்யலாம் (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக் 32).

12. தஸ்தாவேஜை எழுதிக்கொடுப்பவர்கள் 4 மாத டயத்துக்குள் ரிஜிஸ்தர் செய்துகொடுக்காவிட்டால் தஸ்தாவேஜை பெற்றவர் மேற்படி டயத்துக்குள்ளாகவே ஆபீசில் தாக்கல் செய்து சம்மன் படி வகையறுக்கள் சகிதம் மனு கொடுத்தால், தஸ்தாவேஜை எழுதிக்கொடுப்பவரை ரிஜிஸ்தர் ஆபீசர் சம்மன் வகையறு பிறப்பிவித்து ஆஜராகும்படி செய்வார் (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன் 36).

13. தஸ்தாவேஜில் கண்ட அசையாப்பொருள் எந்த சப்டிஸ்திரிக்ட்டைச்சேர்ந்ததோ, அந்த சப்ரிஜிஸ்தரார் டிஸ்திரிக்ட் ரிஜிஸ்தரார் ஆபீசில் தாக்கல் செய்து தஸ்தாவேஜை ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டியது. டிஸ்திரிக்ட் ரிஜிஸ்தரார் ஆபீசில் ரிஜிஸ்தர் செய்ய நேருங்கால், சாதாரணக்கட்டணத்திற்குமேல் ரூ. $5\frac{1}{2}$ அதிகமாய்ச்செலுத்தவேண்டும். (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன் 28, 30 (a) கட்டண ஜாபிதா).

14. அசைப்பொருளுக்கு சம்மந்தப்படாத தஸ்தாவேஜுகளையும், டிக்ரி நகல் வகையறுக்களையும் எந்த ஆபீசிலாவது ரிஜிஸ்தர் செய்துகொள்ளலாம். எந்த சொத்தாவது, வேறெந்த அசையாப்பொருளாவது, கிரயஞ்செய்ய, குதுவை வைக்க, கவுல் கொடுக்க எழுதிக்கொடுக்கும்உடன்படிக்கை அசையாப்பொருளுடன் சம்மந்தப்பட்டதாயிருந்தபோதிலும் இஷ்டமான ஆபீசில் ரிஜிஸ்தர் செய்துகொள்ளலாம். (ரிஜிஸதரேஷன் ஆக்ட் செக்ஷன் 29).

15. கோர்ட்டு டிக்ரி அல்லது உத்திரவுகளின் சர்ட்டிபை செய்யப்பட்ட காபிகள் எந்த கோர்ட்டாரால் பிறப்பிக்கப்படுகின்றனவோ, அந்த கோர்ட்டு எந்த சப்டிஸ்திரிக்டைச் சேர்ந்ததோ, அந்த சப்ரிஜிஸ்தரா ராபீசில் தாக்கல் செய்யவேண்டியது. (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன் 29)

தஸ்தாவேஜு எழுதிக்கொடுப்பவர்கள் பலராயிருந்து தஸதாவேஜு எழுதும்போதே எந்த முகாந்திரத்தைக்கொண்டாயினும் அவர்களில் யாராயினும கையொப்பமிடக்கூடாமலிருந்தால், கையொப்பமிட சாத்தியப்பட்டவர்கள் மாத்திரம் கையொப்பமிட்டு, அவர்கட்குச்சம்மந்தம்பட்டமட்டில் ரிஜிஸ்த்ருஞ்செய்துக்கொள்ளலாம். மற்றவர்கள் பிறகு எந்த சௌகரியமான காலத்திலாயினும்கை யொப்பஞ்செய்து ரிஜிஸதர் செய்துகொள்ளலாம். இதற்குவாயிதா அவரவர்கள் கையொப்பமிட்டதேதிமுதல் கணக்கிடவேண்டியது. (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட்டு செக்ஷன் 23).

17. நீக்கக்கூடாத எந்த காரியத்தினாலாவது, அல்லது அசந்தர்ப்பத்தினாலாவது டயன்படி பத்திரத்தை ரிஜிஸ்தராபீசில் தாக்கல் செய்யக்கூடாமல், பிறகு தாக்கல்செய்து ரிஜிஸதர் செய்வதற்கு அடியில்கண்ட விவரப்படி அபராதஞ்செலுத்தி ரிஜிஸதர் செய்துக்கொள்ளலாம். (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன், 24).

18. தஸ்தா வேஜு பிறந்த 4 மாதத்துக்குள் தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தவன் அவசியமான எந்த காரணத்தினாலேனும் ரிஜிஸ்தராபீசில் ஆஜராகிரிஜிஸ்தர் செய்துகொடுக்கத்தவறினால் மேற்கண்ட விதிப்படிக்கே அபராதஞ் செலுத்தி ரிஜிஸ்தர் செய்துகொள்ளலாம். (ரிஜிஸ்தரேஷன் ஆக்ட் செக்ஷன் 34)

19. அபராதம்.—

(1) ஒருவாரத்திற்கு மேற்படாத தாமதத்திற்கு ரிஜிஸ்திரேஷன் கட்டணத்திற்குச் சரியான கட்டணம்;

(2) ஒருவாரத்திற்கு மேற்பட்டும்; ஒருமாதத்திற்கு மேற்படாமலுமிருக்கிற தாமதத்திற்கு ரிஜிஸ்திரேஷன் கட்டணத்திற்கு இரட்டிப்பு;

(3) ஒருமாதத்திற்கு மேற்பட்டும் 2 மாதத்திற்கு மேற்படாமலுமிருக்கிற தாமதத்திற்கு ரிஜிஸ்திரேஷன் கட்டணத்திற்கு ஐந்து மடங்கு;

(4) இரண்டு மாதத்திற்கு மேற்பட்டும, நான்குமாதத்திற்கு மேற்படாமலுமிருக்கிற தாமதத்திற்கு ரிஜிஸ்தரேஷன் கட்டணத்திற்கு பத்து மடங்குமாம்.

(ரிஜிஸ்திரேஷன் ரூல் 3).

20. தஸ்தாவேஜு பிறந்து முதல் நான்குமாதத்திற்குள் ரிஜிஸ்தராபீசில் தாக்கல் செய்ய சாத்தியப்படாமல் அபராதஞ்செலுத்தி அடுத்த நான்கு மாதத்திற்குள் தாக்கல் செய்யப்படும் தஸ்தாவேஜு விஷயத்திலேயும தஸ்தாவேஜு எழுதிக்கொடுப்பவருக்கு அவசியமான சில நிற்பந்தத்தால் ஆஜராக சாத்தியப்படாவிட்டால் மேற்கூறிய வண்ணமே அபராதஞ்செலுத்தி மூன்று நான்கு மாதத்திற்குள் ரிஜிஸதராபீசிலாஜராகி ரிஜிஸதர் செய்துகொள்ளலாம். (ரிஜிஸ்திரேஷன் ஆக்ட் செச்ஷன் 34)

21. தஸதாவேஜில்கண்ட தொகை ரிஜிஸதர் செய்வதற்கு முந்தியே செல்லுவழியாயிருக்கலாம். அந்தத்தொகை செல்லுவழியாயிருப்பதாக ரிகார்டு செய்துக்கொடுக்கவேணுமாய் ரிஜிஸதர் ஆபீசரை கேட்டுக்கொண்டால், அவர் அந்தப்படி தொகை செல்லுவழியானதாக ரிகார்டு செய்துகொடுக்கலாம்.

(இன்னும் வரும்)

General News.

சமாசாரக் குறிப்புகள்.

WADLAW COLLEGE, BELLARY.

(Remarks of Mr. Marsdon, Inspector of Schools)

பல்லாரி ஜில்லாவிலுள்ள மற்ற காலேஜிகளுள் வார்ட்ளா காலேஜி 5, 6 மாத காலமாய் ப்ளேக் உபத்திரவத்தினல் மிக்க துர்த்தசையை யடைந்திருந்தது. ஆகிலுமது அவ்வதிர்ச்சியினின்றும் நிவர்த்தியாகி, வகுப்புகள் சீர்திருத்தமடைந்து நல்ல

விருத்திக்கு வந்துகொண்டிருக்கிறது. காலேஜி மிக்க சந்தோஷகரமான ஸ்திதியிலிருப்பதற்காக பிரின்ஸபால் மிஸடர் கோட்லிங்காம் (Principal Mr., Cotelingam) என்பவர் கீர்த்தியடையக் கடமைப்பட்டிருக்கிறார். அதற்கு அவருடைய ஊக்கமும் கவலையும் சாமர்த்தியமுமே காரணம். இபபொழுது தற்காலத்திலுள்ள உபாத்தியாயர்களும் அவரை ஆவலுடன் அனுசரித்து வருகிறபடியால் புகழ்ச்சிபெறத்தக்கினவர்களாகவிருக்கின்றார்கள். வருஷக்கணக்காய் உழைத்துவரும் முதலாவது உபாத்தியாயர்உழைப்புமிகச்சிறந்தது. மொத்தத்தில் காலேஜிஉபாத்திமார்கள் மிக்கவல்லவர்களும் பரிக்ஷையில்தேர்ந்தவர்களும், நடையுடைகளிற் சிறந்தவர்களும் ,நல்லொழுக்கமுள்ளவர்களும், குணமுள்ளவர்களுமாயிருக்கின்றார்கள். மேற்கண்டவர்களின் ரிமாக்கினால் பாடசாலைகளிலுள்ள எல்லா வாத்தியார்களும் ஒற்றுமையும், ஊக்கமும், பிள்ளைகளின் நலத்தைக்கருதி சிரத்தையாய் உழைப்பவர்களுமாயிருத்தல்வேண்டுமென்று நன்கு விளங்குகின்றதே. அப்படிக்கிருக்க சிற்சில பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் வகுப்புகளிற்றூங்குகிறதும், வித்யாகர்வத்தினால் அனுவசியமான சச்சரவுகள் செய்கிறதும், வம்புகள் பேசிகிறதுமாய்ப்பிள்ளைகளுக்குச்சரியாய்ப் பாடங்கற்பிக்காமல் நாட்களை வீணில் கழித்துச் சம்பளஞ்சரிவரப் பெற்றுவருகிறார்கள். இதைச் சீர்திருத்த இனிஸபெக்டிங்கு ஆபீசர்கள் அல்லவோ முயல வேண்டும்.

திருவநந்தபுரம் மகாராஜா அவர்களின் ஜந்மநக்ஷத்திர வைபவத்தைப்பற்றி நாளது அக்டோபர் மாதம் 8 தேதியன்று வழக்கப்படி நடத்திவருகிற மாதிரியாகச் சிறப்பாய் நடத்தப்பட்டது. மேற்படி விபத்திற்காக வைதீகச்சடங்குகள் முடிந்த உடன் இராஜாங்கப் பல்லக்கில் காலை 8 மணிமுதல் 10 மணிக்குள்ளாக மகாராஜா அவர்கள் பட்டணப்பிரவேசஞ்செய்தார்கள். சுதேச உத்தியோகஸ்தர்களெல்லாரும் விஜயஞ்செய்தார்கள். மகாராஜா அவர்கள் பற்பல கனவான்களிடமிருந்து வாழ்த்துக்கடிதங்கள் வரப்பெற்றார்கள். அநேகமாயிரமேழைகட்கு அமுதளிக்கப்பட்டது.

உய்யூரு யூனியன் (Vuyyuru) 9—10—02.

பெஜ்வாடா (Bezwada) தாலூகா போர்ட்டு பிரசிடெண்டு துரையவர்களுக்குச் சில குடிகள் சேர்ந்து பிட்டிஷன் செய்துக்கொண்டதாவது:—இந்த ஊர் யூனியன் கிளார்க்கு கோவிந்தராஜு காமேசுவரராவு உள்ளூராயிருப்பதாலும், அவருக்கு உள்ளூரில் நிலபலங்களிருப்பதாலும், பந்துஜனங்கள் விசேஷமாயிருப்பதாலும், ஜனங்களுடைய தாக்ஷிண்யத்திற்குட்பட்டவராயிருப்பதாலும், ஊர் கட்சிப்பட்டிருப்பதாலும் அவர் எந்தக்கட்சியிலாவது சம்மந்தப்படும்படி நேரிடுங்கால் சிலருக்கு மனக்குறைவுண்டாகுமானதாலும், அவரை வேறுயிடத்திற்கு மாத்த உத்திரவாகவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தத்தாலூகா போர்ட்டு யூனியன்களில் உள்ளூரார்களே யூனியன் குமாஸ்தாக்களாயிருக்கிறார்கள். இதைப்பற்றி டிஸ்திரிக்ட்டு போர்டு, தாலூகா போர்டு பிரசிடெண்டுகளும் யூனியன் சேர்மேன்களும், யூனியன் க்ளார்க்குகள் உள்ளூரார்களாயில்லாமல் வெளியூரார்களாயிருப்பது நலமெனக்கருதி சென்னையிலுள்ள மற்ற எல்லாத்தாலூகாக்களிலும் உள்ள யூனியன்களிலுள்ள உள்ளூ

ர் ஆசாமிகளை வெளியூர்களுக்கு அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருப்பார்களென நம்புகிறோம்".

பஹவல்பூர் நவாப் (Bhawalpore Nawab) அவர்கள் தம்முடைய இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் காலியாகுமிடத்தில் ஐந்தில் நான்கு பங்கு மகம்மதியர்கட்கு வேலைகொடுக்க வேண்டுமென்றும், ஒருபங்கு இந்துக்களுக்குஞ் சீச்கியர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும் விசித்திரமான உத்தரவளித்திருக்கிறார்களாம்; வாலிப நவாப் அவர்கள் தன் இராஜாங்கத்தைச்சேர்ந்த ஆபீசுகளை பரிசோதித்துப் பார்த்த காலத்தில், அனேகமாய் இந்துக்களே உத்தியோகஸ்தர்களாயிருக்கக்கண்டு தான் இவ்வுத்தரவளித்திருக்கிறாராம்; நவாப் அவர்கள் மகமதியர்கட்கு உத்தியோகங் கொடுக்கிற விஷயத்தில் ஆக்ஷேபிக்கிறவர்களில்லையாயினும், இப்போதேற்பட்ட உத்தரவானது, ஒழுங்காய் நடத்தப்பட்டு வரும் இராஜாங்கத்தைச்சேர்ந்த காரியங்கட்கு ஒருக்காலிடைஞ்சலுண்டாகுமென்று நாம பயப்படவேண்டியிருக்கிறது. இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களில் இந்துக்களிருந்து வருவது மகமதியர்கள் தகுந்த பரிக்ஷை முதலியவற்றில் தேறாமல் பின்னிடைந்த குற்றமே தவிர வேறில்லை. இராஜாங்க உத்தியோகத்திற்குப் படிப்பு சிபாரிசு செய்யத்தக்கதேயன்றி ஜாதியைப் பொருத்ததன்று; பின்னிடைந்தவர்களைத்தக்கபடி வாசிப்பித்து குறித்த பரிக்ஷைகளிற்றேறியபின்னர், உயர்ந்த உத்தியோகத்தைப்பெற இந்துக்களோடு மகமதியர்கள் போட்டி போடவேண்டுவது சிறந்தமார்கமென்று பெங்காலிபத்திரிகைகூறுகின்றது.

இந்தியாவில் மற்ற வகுப்பினரைக்காட்டிலும் பிராமணர்கள் கலியாண காலங்களில் அதிகச்செலவிடுகிறார்கள் என்பதற்கு இது ஓர் திருஷ்டாந்தமாகவிருக்கிறது. பங்காளத்தைச்சேர்ந்த மைமன்சிங்கிலிருக்கிற (Mymensingh) அம்பேரியா ஜமீன்தார் அவர்கள் (Zemindar of Ambaria) சமீபத்தில்தான் ஏககாலத்தில் நடத்திய புத்திரி புத்திர விவாஹங்களுக்காக ஒண்ணரைலக்ஷ ரூபாய் செலவிட்டிருக்கிறாரென்று பெங்காலி பத்திரிகைகள் கூறுகின்றன. அக்கல்யாண மகோச்சவங்களின் பொருட்டு வந்திருந்த தன் பந்துக்கள், ஆபீஸ் உத்தியோகஸதர்கள் பகுளமாய்க்கூடியிருந்தார்கள். அவர்களொவ்வொருவருக்கும் தவராமல் காஷ்மீரதேயத்துச் சால்வைகளைப் பகுமானமாகக்கொடுத்தது வியப்பான சிலவுகளிலொன்று. நடுத்தரத்தினரும்இவ்வித அடாபிடிச் சிலவிடுவதுமுண்டு. இவ்விதச்சிலவிற்கு இடங்கொடாதவர்கள் வியவசாயிகளே!

மகாகனம பொருந்திய **மைசூர் மகாராஜா** அவர்கள் பெஜார ட்டியடைந்து சென்ற ஆகஸ்டுமாதம் 8உ வெள்ளி கிழமையன்று **இராஜ பிரதிநிதி லார்டு கர்ஸன் துரையவர்களால்** பட்டாபிஷேகம் பண்ணப்பட்டு, ஸ்வயமாகவே இராஜியபாரத்தை வகித்துச் செய்யத்தொடங்கினர். இதுகாலம் ரீஜண்டாயிருந்து இராஜியபரிபாலனத்தைச் செம்மையாய் நடத்திவந்த மகாராஜா அவர்களின் மாதாவாகிய **மகா ராணியாருக்கு** அவருடைய திறமையையும், இராஜிய விஷயமாய்ச்செய்த உதவியையும் மெச்சி, **லார்டு கர்ஸன் பிரபுவானவர்** நமது சக்கிரவர்த்தியாருக்கு சிபார்சு செய்து, அவர் எங்கு சென்றாலும் அவருடைய ஆயுள்பரியந்தம் 13 மரியாதைக்குண்டுகள் போடும்படியான கௌரதையைக் கொடுத்திருக்கின்றனர். மகாராஜா அவர்கட்கு உதவியாக திவான் மகா-ள-ள-ஸ்ரீ **திவான் பஹதூர் கிருஷ்ணமூர்த்தி ராவ் அவர்கள்** பிரசிடெண்டாகவும், மகா-ள-ள-ஸ்ரீ **வி. பி. மாதராவ் அவர்கள்** முதல் கௌன்சிலராகவும், மகா-ள-ள-ஸ்ரீ **ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள்** இரண்டாவது கௌன்சிலராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. **மகா ராஜா அவர்கள்** தமது வித்தியாசிரியராகிய **மிஸ்டர் பிரேஸர்** துரையவர்களுடைய நன்முயற்சியால் இராஜிய விஷயங்களிலும், மற்றுமுலக நடவடிக்கைகளிலும் அதிகப்பயிற்சியுள்ளவராகவிருக்கிறார்கள். இவர் தம்முடைய க்யாதிபெற்ற பிதாவைக்காட்டிலும் மேலான கீர்த்திபெற்று தர்மந்தழைக்க இராஜிய பரிபாலனஞ்செய்துகொண்டு நீடூழிவாழ ஈசுவரன் அருள்புரிவாராக. சுபம்:

நன்மையும் தீமையும்.

(சிறுவர்கட்கு)

ஒரு ஏழைக்குடியானவன் ஒரு பசுமாட்டை வைத்திருந்தான். மாரிகாலமானதால் அதிக குளிராயிருந்த ஓர்நாள் பசுவுக்கு ஆகாரம் சம்பாதிப்பது கூடாமலிருந்தது. பசுவைப்பட்டினிபோடுவதைக்காட்டிலும் பக்கத்து வீட்டுக்கொல்லையில் இருந்த போரில் வைக்கோல் பிடுங்கிக்கொண்டு வருவதாய்ச்சென்றான். அன்றிரவில் யாருமறியாமல் பக்கத்து வீட்டின் பிழக்கடையிலிருந்த போறில் வைக்கோல் பிடுங்கினன்; போதுமான வைக்கோல் பிடுங்கியானதும், தனக்குள்ளேயே தன் திருட்டுப்பிழைப்பைபற்றிக் கொஞ்சமாலோசிக்கலானன். "பசு செத்தாலுஞ் சாகட்டும், யோக்கியதை தான் பெரிது," என்று பிடுங்கின வைக்கோலை எடுக்காமலே வீடுவந்து சேர்ந்தான்.

மறுநாள் காலையில் அண்டைவீட்டுக்காரன் ஓர் பெரும் வைக்கோல் கட்டைத் தன் தலையில் சுமந்துகொண்டுவந்து ஏழையினிடங்கொடுத்து, "யோக்கியதையே பெரிது, உன் பசு சாகவேண்டாம்," என்று சொல்லிச் சென்றான்.

மனிதர்கள் தாங்கள் கெட்டவழியில் செல்லும்போது மனதைக் கொஞ்சம் சிரமப்பட்டுத்திருப்பி நல்வழிக்குக்கொண்டு வந்தால் அவர்களுக்குக் கடவுளின் சகாயமுண்டு.

No 19.

Proceedings of the Teachers' association Turaiyur held on Thursday the 16TH *October* 1902 *at the Zemindars Lower Secondary School.*

Present.

M. R. Ry. V. Kothandaramanujachariar Avergal, *President.*

" K. Doraisamy Iyengar Avergal, *Secretary.*

MEMBERS.

1. Mr. R. Venkatasubba Iyer, Head Master Z. W. P. School Turaiyur.
2. " S. Kuppusami Row, Gymnastic Instructor Z. L. S. School "
3. " T. Venkatachallam Pillai, Assistant Master, Z. W. P. " "
4. " C. Doraisamy Iyer, Head Master B. P. School Kirambur.
5. " Veeraiyar School Master, R. S. School, Kalingamudayampatti.
6. " Sanjivi Aiyah " " Okkasai.
7. " Namasivaya Vathiyar " Perumalpolium.
8. " Chokkalinga Iyer School Master, Board School, Kanapady.
9. " Chinnasamy Iyer, " " Sengattupatti,

10. ,, Dhakshnamoorthy Pillai ,, R. S. School Nalliampoliem.
11. ,, Velayudha Iyer, ,, ,, Chittaraipatti.

1. Had it not been for the heavy rain, that has fallen this afternoon the other members also, who evince much interest on behalf of the association, would have made their appeærence.

2. A short essay was read out by the President illustrating the poem of of Chamelion, that a single person's opinion on a certain fact should not be merited has conclusive in itself, in the absence of the opinion of experienced men.

3. A short story elucidating the morals that "a man deviseth his way; but the Lord directeth his steps," and that "If the mighty punisheth the weak, they shall not go unpunisheth by the Almighty," was described by the Secretary.

4. A few modal sums on fractions required for the 4th standard were worked out on the Black-Board by the Secretary.

5. The next meeting is purposed to be held at 2 P. M., on the 15th day of November. It is specially requested that the supervisor of Primary Schools, who was since joined the Musiri Taluk on transfer will honor the members with his presence on the 15th proximo.

Teachers' association,
Turaiyur,
16th October 1903.

(Signed) K. DORAISAMY IYENGAR,

Secretary.

(Signed) V. KOTHANDARAMANUJACHARIAR,

President.

(True copy)

K. DORAISAMY IYENGAR,

19—10—1902

Secretary.

சனவான்களே,

ஆரியமு மாங்கிலமு மாசறு தென்னாட்டிலகு
சீரிய நந்தமிழைச் சீரியே—பூரியராய்
வந்து *நலியலாய விழந்ததைத் தமிழீர்
முந்துமின் காப்பமுயன்று.

இத்தேயத்தில் சிருட்டிகாலந்தொடங்கிப் பெருமை பெற்று வழங்கி வரும் நமது தமிழ்ப்பாஷை சிவபெருமான் முருகக்கடவுள் முதலிய தேவர்களாலாராயப்படும் தெய்வச்சமுடையதாயும், அகத்தியமுனிவர் அதங்கோட்டாசான்முதலிய இருடிகட்கினிமைதோன்றுஞ் சொல்லையுடையதாயும், பொய்யடிமையில்லாத புலவராதி நல்லறிவாளர் நினைத்தாடிப் போதுபோக்க விரும்பப்பட்டதாயும், சேரசோழபாண்டியரென்னுந் திருந்தலர்க்கடந்த பெருந்தகையரசர்களாற் கண்ணையிமைகாக்குமாறுபோற்பிரிந்து காக்கப்படுவதாயுமிருந்ததற்குக் கால வேறுபாட்டால் ஆரியமோர்பாலும் ஆங்கிலமோர்பாலுமாய் நின்று நெருக்குதலின், அவைகட்கவ்விடத்தைத் தத்தம்பண்ணிவிட்டுப் புறம்போகத் தலைப்படுகின்றது. சிலகாலத்திற்குமுன் ஐதராலி முதலிய மகமதியவரசர்களால், நமது நாட்டார் தங்கள் சுதந்திரங்கெட்டுச் செல்வங்களையும், புராதன தமிழ் நூல்களாகிய கல்விகளையுமிழந்தாற்போல நமது தமிழ்ப்பாஷையும் வேற்றுநிலத்துப்பாஷைகளாற்றனது சொல்லினம்பொருளினங்களை யிழக்கப்போவதாயிருக்கின்றது. புராதன தமிழ் நூல்களில் சில அம்மகமதியவரசர்கள் கண்கட்கு புலப்படாமல் எஞ்சியிருந்தவைகள் தற்காலத்தில் இறத்தற்கேதுவாய் நோய்கொண்டிருப்பவைகளை கண்ணுற்று மருத்துவனைப்போல் சிகிச்சை செய்துவரும் நமது கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதய்யர் அவர்கட்குக் கடவுள் தீர்க்காயுளையும், சரீர திடத்தையும் அருளுமாறு அக்கடவுளைத் துதிபுரிவதுடன் அவ்வய்யரவர்கள் செய்யும் நன்றியை மறவாத கடமைபூண்டிருப்போமாக.

நமது காருண்ணிய கெவர்ன்மெண்டார் நம்மை தீயவரசரின் சிலுக்கிலகாகாமல் பாதுகாப்பதுபோல நமது அரிய தமிழ்ப்பாஷையையும் அக்கவர்ன்மெண்டார் தங்கள் கருணை நிறைந்த கடைக்கண்களாற்பார்த்தளிக்குங்காறும் இத்தமிழை இயன்றவரை நாம் அபிமானிக்கக்கடமைப்பட்டிருத்தலின் இதற்குச்சாதகமாயுள்ளவை தமிழ்ப்பத்திரிகைகளேயாம்.

இப்போது வழங்கிவரும் தமிழ்ப்பத்திரிகைகளுள் இச்சுகுணசுந்தரமும் ஒன்றாய் 1912ஹு மேமீ முதல் துவக்கி நடத்தப்பட்டு வருகிறது. இது இந்நாட்டில் நிலைபெற்று உலாவுதற்பொருட்டுத் தத்தமக்கியன்றநன்கொடையையளிக்கவும் இப்பத்திரிகையைத் தருவித்து அபிருசியுடன் வாசிக்கவும், இதன்கணுள்ள விஷயங்களின் உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக்கூறவும், புத்திமான்களாகிய சனதனவான்களை வேண்டுகின்றோம். இப்பத்திரிகையுடனனுப்பப்படும் "நன்கொடை" (Donation) பாரத்தில் அவரவர்கள் அளிக்கப்படும் நன்கொடை (Donation) ருவத்தை எழுதியனுப்பப்படுமாகில், அதனையிப்பத்திரிகையின் நிலைபேறுக்குச்சாதகமாய் நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளப்படுவதோடு அக்கொடையாளிகளை இப்பத்திரிகையிலும் பிரசித்தஞ்செய்யப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு, துறையூர். முசிரிதாலூகா.

---

*நலிதலாவது தமிழின்கண் அவ்வச்சொற்களை விரவிவழங்குதல்.

To our Subscribers.

The manager requests those, who have not as yet sent in their Subscription, to be pleased to intimate to him their desire of being enlisted by the year or otherwise through a post card and kindly remit the Subscription, within a fortnight from the date of receipt of this issue. In the event of failure to receive the said information or the Subscription, the manager will be necessitated to despatch the next issue by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

நமது கையொப்பக்காரர்களில் அநேகர் தங்கள் சந்தாத்துகைகளைச்செலுத்தியும், செலுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். செலுத்தாத ஏனையோர் தங்களைச்சந்தாதாரர்களாக ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டியதற்கும், அல்லது தங்கள் விருப்பத்திற்கிணங்க எவ்விதஞ்செய்யவேண்டுமோ அதற்கும் காலணாகடிதமூலமாய் எம்மீது அன்புகூர்ந்து தெரிவிக்கவேண்டுமாயும், அப்படிப்பத்திரிகை பெற விரும்புவோர் தங்கள் சந்தாத்துகையை இன்னும் பதினைந்து தினத்திற்குள் தயவுசெய்து அனுப்ப வேண்டுமாயும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறியபடி காலணா கார்டாவது, சந்தாத்துகையாவது அனுப்பாத பத்திரிகாநேயர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. தபால்மூலமாக அனுப்பப்படும்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்குவரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்குஞ்சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.